. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

உங்கள் அபிமான தின தமிழ் செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்! கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil
• பதிப்பு : நாகர்கோவில் • 12.03.2026 • மலர் 04 • இதழ்: 70 • Edition : Nagercoil • 12.03.2026 • Vol : 04 • Issue : 70 • Page : 4 • Rs. 5/-

# ரூ.156 கோடியில் அலுவலகங்கள்; குடியிருப்புகள் திறப்பு









## முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார்

சென்னை, மார்ச். 12 பதிவுத்துறை, ஊரகவளர்ச்சித்துறை, நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் ஆகியவை சார்பில் ரூ.155.81 கோடியில் சார்பதிவு அலுவலகங்கள், அடுக்குமாடி குடியிருப்புகள், அலுவலக கட்டிடங்களை முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார்.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு:

கோயம்புத்தூர்–கிணத்துக்கடவு, சூலூர், தூத்துக்குடி – ஏரல், விழுப்புரம் திருவெண்ணைநல்லூர், திருவள்ளூர் – பொன்னேரி, திருப்பத்தூர் 2 எண் இணை சார்பதிவாளர் அலுவலகம் மற்றும் சிவகங்கை – திருப்புவனம் என ரூ.14.92 கோடியில் பதிவுத்துறைக்கு கட்டப்பட்டுள்ள 7 புதிய சார்பதிவாளர் அலுவலகக் கட்டிடங்களை முதல்வர் ஸ்டாலின் காணொலியில் திறந்தார்.

இதுதவிர, கோயம்புத்தூர் (வடக்கு) பதிவு மாவட்டத்தில் புதியதாக உருவாக்கப்பட்ட சர்க்கார்சாமக்குளம் சார்பதிவாளர் அலுவலகம், 22 கிராமங்களை உள்ளடக்கி புதிதாக உருவாக்கப்பட்ட பாப்பாரப்பட்டி சார்பதிவாளர் அலுவலகம் ஆகியவற்றையும் முதல்வர் திறந்தார்.

மேலும், ஊரகவளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் ரூ.78 .41 கோடியில் ராமநாதபுரம்வல்லிமாடன்வலசையில் கட்டப்பட்டுள்ள சமத்துவபுரம், நாமக்கல், வையப்பமலையில் அமைக்கப்பட்டுள்ள சுப்ரமணியசாமி கோயில் மலைச்சாலை மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலகக் கட்டிடங்கள், பொது சுகாதார கட்டிடங்கள், சமுதாயக் கூடங்கள், பள்ளிக் கட்டிடங்களையும் திறந்தார்.


இதுதவிர, கோயம்புத்தூர், அவினாசி பிரதான சாலையில் உள்ள வஉசி பூங்காவில் ரூ.50 லட்சம் செலவில் நிறுவப்பட்ட ஜி.டி. நாயுடு சிலையையும் முதல்வர் திறந்தார்.

மேலும், நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் மதுரையில் சுப்பிரமணியபுரம் திட்டப் பகுதியில் ரூ.62.68 கோடியில் கட்டப்பட்ட 396 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளை திறந்து வைத்தார். கடந்த 5 ஆண்டுகளில் 210 திட்டப் பகுதிகளில் 74,522 அடுக்குமாடி குடியிருப்புகள் திறக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் ஐ.பெரியசாமி, தா.மோ.அன்பரசன், மு.பெ.சாமிநாதன், பி.மூர்த்தி, தலைமைச் செயலர் நா.முருகானந்தம் உள்ளிட்டோர்பங்கேற்றனர்.



மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் கிருஷ்ணகிரி சுங்கசாவடி அருகே நடைபெறவுள்ள நிகழ்ச்சியில், அரசு புதிய திட்ட பணிகள், முடிவுற்ற பணிகள் துவக்கி வைத்து நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா முன்னேற்பாடு பணிகள், பந்தல் அமைக்கும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் .தே.மதியழகன் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். உடன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் .கவிதா, வருவாய் கோட்டாட்சியர் .ஷாஜகான், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் .சங்கர் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



திருவள்ளூர் மாவட்டம் மற்றும் வட்டம், காக்களூர் கலவல கண்ணன் செட்டி மேல்நிலைப் பள்ளியில் (11.03.2026) நடைப்பெற்ற பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு மையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.மு.பிரதாப், இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் (பொ) திரு.கோ.சுப்பராவ், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் உள்ளனர்.




தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் (11.03.2026) சமூகநலன் (ம) மகளிர் உரிமைத்துறையின் சார்பில் "பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் திட்டத்தின்" கீழ் மாவட்ட மகளிர் அதிகார மையம் மூலமாக ஆதிதிராவிட நல அலுவலக சமூகநீதி விடுதியில் தங்கி பயிலும் 60 மாணவிகளை ஒரு நாள் கல்வி சுற்றுலாவாக திருநெல்வேலி பொருநை அருங்காட்சியத்திற்கு அழைத்து செல்லும் வாகனத்தினை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ஏ.கே. கமல் கிஷோர்.இ.ஆ.ப. அவர்கள் வழி அனுப்பி வைத்தார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் திரு .சீ. ஜெயச்சந்திரன் அவர்கள் உள்ளார்.

## காவல்துறை மற்றும் துணை ராணுவத்தினர் தேனியில் கொடி அணிவகுப்பு



சட்டமன்றத் தேர்தல் முன்னிட்டு தேர்தல் பாதுகாப்பு பணிகள் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் காவல்துறை மற்றும் துணை ராணுவத்தினர் தேனியில் கொடி அணிவகுப்பு நடைபெற்றது

வருகின்ற 2026 சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு தேர்தல் பாதுகாப்பு பணிக்காக தெலுங்கானாவில் இருந்து ஆய்வாளர் ஹர்மான் கட்கட்டா தலைமையில் ராணுவ படையினர் 39 CRP பேருடன் தேனி மாவட்டத்திற்கு வருகை தந்துள்ளனர்

இந்நிலையில் தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சினேக பிரியா உத்தரவின் படி தேனி பகுதிகளில் மத்திய பாதுகாப்பு துணை ராணுவ படையும் வீரர்கள் 39 பேரும் மற்றும் தேனி மாவட்ட காவல்துறையினரும் 44 பேரிடனும் இணைந்து கொடி அணிவகுப்பு பேரணி நடந்தது

இந்த பேரணியை ஏடிஎஸ்பி மகேஷ் கொடியை சைத்து தொடங்கி வைத்தார் இந்தப் பேரணி தேனி அல்லிநகரம் சாலை பிள்ளையார் கோவில் இருந்து பொம்மையா கவுண்டன்பட்டி சாலை பிள்ளையார் கோவில் இருந்து அல்லிநகரம், நேரு சிலை, பழைய பேருந்து நிலைய நேரு சிலை வழியாக பங்களா மேடு பகுதி வரை கொடி அணிவகுப்பு நடைபெற்றது

இந்த தேர்தல் காலங்களில் வாக்காளர்கள் எந்த ஒரு அச்சமும் இன்றி வாக்குச்சாவடி மையங்களுக்கு வந்து வாக்களிக்கும் விதமாகவும் சட்டம் ஒழுங்கு பிரச்சனைகள் ஏற்படாமல் விதமும் இந்த கொடி அணிவகுப்பு



திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக்கூட்டரங்கில் சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர் (பதிவுகள் சரிபார்ப்பு) திருமதி அ.மயில் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டார்கள்.



தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் தேர்தல் பணிக்குழு பொறுப்பாளர்களில் ஒருவரான மூத்தவர் திரு.வேணுகோபால் அவர்களை சந்தித்து, ஊத்தங்கரை சட்டமன்றத் தொகுதிக்கான வேட்பாளராக போட்டியிட திரு.க.ஈழமுரசு (எ) தவராஜ் அவர்கள் விருப்பமனு வழங்கினார். இந்த சந்திப்பில் திருப்பத்தூர் மண்டல செயலாளர் கருப்பு பிரபாகரன் மற்றும் கிருஷ்ணகிரி ஒருங்கிணைந்த தொழிற்சங்க மாவட்ட தலைவர் தம்பி அ.சாந்தகுமார் கலந்து கொண்டனர். விருப்பமான தொகை ரூபாய் 1000



திருவள்ளூர் மாவட்டம் மற்றும் ஊராட்சி ஒன்றியம். காக்களூர் ஊராட்சி காக்களூர் ஏரி பகுதியில் ஊரக வளாச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ ரூ.2.51 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டு வரும் நிறைவு பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.மு.பிரதாப்.இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு மீதமுள்ள பணிகளையும் தரிதமாக முடிக்க வேண்டுமென சம்பந்தப்பட்ட அலுவர்களுக்கு உத்தரவிட்டார். உடன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர்/இணை இயக்குந) திரு.வை.ஜெ.பக்குமார். செயற்பொறியாளர் (ரக வளர்ச்சி) திரு.எஸ். தணிகாச்சலம், திருவள்ளூர் வட்டமழ வளர்ச்சி அலுவளர் திரு.பி.செல்வகுமார், தவி செயற்பொறியாளர் திரு.கோவேந்தன் திருவள்ளூர் வட்டபபட்சியம் திருமலாஜி தனி பொறியாளர் மற்றும் குறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.



சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பூவந்தி ஊராட்சியில் (10.3.2026) செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் நடத்தப்பட்ட தமிழக அரசின் சாதனைகள் மற்றும் திட்டங்களை விளக்க புகைப்படக் கண்காட்சியினை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டனர்.

தினதமிழ்
12.03.2026

# தென்காசி மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு: முதன்மை மாவட்ட நீதிபதி ராஜவேலு தொடங்கி வைத்தார்



தென்காசியில் அமைக்கப்பட்டுள்ள மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு செயல்பாடுகளை முதன்மை மாவட்ட நீதிபதி பி.ராஜவேலு தொடங்கி வைத்தார்.

சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழு உத்தரவின் பேரில் தென்காசி மாவட்ட மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இதன் தொடக்க விழாவிற்கு முதன்மை மாவட்ட நீதிபதியும், மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு தலைவருமான பி.ராஜவேலு தலைமைதாங்கிமாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு செயல்பாடுகளை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சிக்கு கூடுதல் மாவட்ட நீதிபதி மனோஜ் குமார், முதன்மை சார்பு நீதிபதிபிஸ்மிதா, கூடுதல் சார்பு நீதிபதி முருகவேல், முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி ராஜேஷ் குமார்,

குற்றவியல் நீதித்துறை நடுவர் மன்ற நீதிபதி முத்துலட்சுமி, சிவகிரி முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதியும் குற்றவியல் நீதித்துறை நடுவர் மன்ற நீதிபதியுமான ஜெனிபர் ஜோசப், கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி காளீஸ்வரி, சங்கரன்கோவில் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி பவித்ரா, ஆலங்குளம் மாவட்ட உரிமையியல்நீதிபதிமுத்துசெல்வம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முன்னதாக முதன்மை மாவட்ட நீதிபதியும், மாவட்ட சட்டப்பணிகள் ஆணை க்குழு தலைவருமானபி.ராஜவேலு நிருபர்களிடம் கூறியதாவது:

இ து வ ரை திருநெல்வேலி மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு தலைமையில் தென்காசி மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு செயல்பட்டு வந்தது. தற்போதுதென்காசிமாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவிற்கு சென்னைஉயர் நீதிமன்றம், மாநில சட் ட ப் ப ணி க ள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது. இதனை அடுத்து தென்காசி மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு தொடங்கி வை க்கப்பட்டுள்ளது. உலக மகளிர் தினத்தை முன்னிட்டு தென்காசி மாவட்ட சட்டப்பணிகள் குழு பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. இனி தென்காசி மாவட்ட பொதுமக்கள் திருநெல்வேலி மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவை நாட வேண்டியதில்லை. அவர்கள் தென்காசி மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவை நாடினால் போதுமானது.

மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவிற்கு தனியாக செயலாளர் நியமிக்கப்பட்டுள்ளார். மேலும் கூடுதல் சார்பு நீதிபதி மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு மேலாளராக செயல்படுவார். சட்டம் சார்ந்த மற்றும் சட்டம் சாராத பிரச்சனைகளுக்கு பொதுமக்கள் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவிடம் மனுக்கள் வழங்கலாம். ஒவ்வொரு மாதமும் மாவட்ட சட்டப்பணிகள் குழு ஆலோசனைக் கூட்டம் நடைபெறும். மூன்றுமாதங்களுக்கு ஒருமுறை சிறப்பு ஆய்வுக் கூட்டம் நடைபெறும். இக்கூட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட காவல் துறை கண்காணிப்பளார் மற்றும் அனைத்து அரசு துறை அலுவலர்கள் கலந்து கொள்வார்கள்.

தென்காசி மாவட்டத்தில் ஆலங்குளம், செங்கோட்டை, சிவகிரி, சங்கரன்கோவில் ஆகிய 4 புறநகர்களிலும் வட்ட அளவில் சட்டப் பணிகள் ஆணைக்குழு செயல்படும், தென்காசி ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில்; மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு தலைமை அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது. நீதிமன்றத்தில் வழக்கு தொடர்வதற்கு முன்பே மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழுவில் மனுக்களை வழங்கி பரிகாரம் காணலாம். முக்கியபிரச்சினைகள் குறித்து நீதிமன்றம் மூலம் பரிகாரம் பெறப்படும். இழப்பீடு உள்ளிட்ட கோரிக்கைகள் குறித்து இங்கு மனு அளித்து பரிகாரம் பெறலாம். மேலும் சட்டம் சாராத பட்டா உள்ளிட்ட பிரச்சனைகளுக்கும் இங்கு மனுக்கள் அளிக்கலாம். அம்மனுக்கள் சம்பந்தப்பட்ட அரசு துறை அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். தென்காசி மாவட்ட பொதுமக்கள் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவில் மனுக்கள் அளித்து பயன்பெறலாம் என கூறினார்.



ஈரோடு மாவட்டம், பவானி ஊராட்சி ஒன்றியம், மயிலம்பாடி ஊராட்சி,கன்னடிபாளையத்தில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்ட தமிழ்நாடு அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்த புகைப்படக்கண்காட்சியினை பொதுமக்கள் ஆர்வத்துடன் பார்வையிட்டார்கள்.

# மண்டைக்காடு பகவதி அம்மன் கோயில் மாசி கொடை விழா: ஒடுக்கு பூஜையுடன் விழா நிறைவு



குமரி மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற பெண்களின் சபரிமலை என்றழைக்கப்படும் மண்டைக்காடு பகவதியம்மன் கோயில் மாசிக்கொடை விழா கொடியேற்றத்துடன் தொடங்கி 10நாட்கள் நடைற்றது. மாசிக்கொடை விழாவில் தினமும் அம்மனுக்கு அலங்கார தீபாராதனை அம்மன் தங்க தேர் உலா வெள்ளி பல்லக்கில் எழுந்தருளல் போன்ற நிகழ்வுகள் நடைபெற்று வந்தது. இந்த விழாவில் தினம் தோறும் தமிழகம் மற்றும் கேரளாவை சேர்ந்த லட்சக்கணக்கான பக்தர்கள் இருமுடி கட்டுடன் வந்தும் பொங்கலிட்டு அம்மனை தரிசித்து சென்றனர். மாசிக்கொடை விழா இறுதி நாளான 10வது நாள் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறையும் வழங்கப்பட்டது. இது போல தமிழகம் கேரளாவில் இருந்து சிறப்பு பேருந்துகள் இயக்கப்படிருந்தது இதனையடுத்து அதிகாலை முதலே மண்டைக்காட்டில் குவிந்த லட்சக்கணக்கான பக்தர்கள் பொங்கலிட்டு அம்மனை வழிபட்டனர்.

திருவிழாவின் இறுதி நாளான நள்ளிரவு மறைவான இடத்தில் தயாரிக்கப்பட்ட பதினொன்று வகையான உணவு பதார்த்தங்கள்மண்பானையில்வெள்ளை துணியால் மறைத்து கோயில் அர்ச்சகர்களால் பவனியாக எடுத்து வரப்பட்டு அம்மனுக்கு படைக்கபட்டு ஒடுக்கு பூஜை நடைபெற்றது. ஒடுக்கு பூஜையில் தமிழகம் மற்றும் கேரளாவை சேர்ந்த லட்சக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு அம்மனை தரிசித்து சென்றனர்.

முக்கிய நிகழ்வான ஒடுக்கு பூஜையின் போது பக்தர்களின் பாதுகாப்பிற்காக மாவட்ட எஸ் பி ஸ்டாலின் தலைமையில் 1200 க்கும் மேற்பட்ட போலீசாரும் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தபட்டனர். பத்து நாட்கள் விழாவில் லட்சக்கணக்கான பக்தர்கள் அம்மனை வழிபட்டு சாமி தரிசனம் செய்தனர்

# நல்லம்பள்ளியில் அதிமுக மாநில மருத்துவரணி சார்பில் முன்னாள் முதலமைச்சர் பிறந்த நாளை முன்னிட்டு அஞ்சல் சேமிப்பு கணக்கு புத்தகம் வழங்கும் விழா

தருமபுரி மார்ச் 12



தருமபுரி மாவட்டம் நல்லம்பள்ளியில் அதிமுக மாநில மருத்துவரணி சார்பில் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் 78 வது பிறந்தநாளை முன்னிட்டு தருமபுரி சட்டமன்றத் தொகுதி நல்லம்பள்ளி கிழக்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதியில் வசிக்கும் 10 வயதுக்கு உட்பட்ட ஆண், பெண் குழந்தைகளுக்கு ரூபாய் 500 விதம் செலுத்தி 501 குழந்தைகளுக்கு இந்திய அஞ்சல் துறையின் செல்வமகள், செல்வமகன்சேமிப்பு திட்டத்தில் புதிய அஞ்சல் சேமிப்பு கணக்கு துவங்கப்பட்டு புத்தகங்கள் வழங்கும் விழா மாநில மருத்துவரணி இணைச் செயலாளர் அசோகன் தலைமையில் நடைபெற்றது. தருமபுரி மாவட்ட செயலாளர் கே .பி. அன்பழகன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு இந்தியஅஞ்சலகசேமிப்பு புத்தகங்களை வழங்கினார். இதில் மாவட்ட அம்மா பேரவை செயலாளர் எஸ் .ஆர் .வெற்றிவேல், பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்ற உறுப்பினர் கோவிந்தசாமி, நகர செயலாளர் பூக்கடை ரவி, மாவட்ட வர்த்தகர் அணி செயலாளர் பொண்ணு வேல், பழனிச்சாமி, நல்லம்பள்ளி ஒன்றியசெயலாளர்கள்பழனி, சிவப்பிரகாசம் மற்றும் மாணவர் அணி விஸ்வநாதன், மாநில, மாவட்ட, நகர, ஒன்றிய கிளைநிர்வாகிகள், உறுப்பினர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# கிருஷ்ணகிரி அருகே உள்ள தானம்பட்டி கிராமத்தில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு நடைபெற்ற எருது விடும் விழா



கிருஷ்ணகிரி அருகே உள்ள தானம்பட்டி கிராமத்தில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு நடைபெற்ற எருது விடும் திருவிழா 300க்கும் மேற்பட்ட ★எருதுகள் பங்கேற்பு குறைந்த வினாடிகளில் இலக்கை நோக்கி ஓடிய எருதுகளுக்கு பரிசுகள்★ வழங்கப்பட்டது .

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தைத்திருநா★ள் பொங்கல் பண்டிகை முன்னிட்டு பல்வேறு கிராமங்களில் தமிழர்களின் வீர விளையாட்டான எருது விடும் விழா நடத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் கிருஷ்ணகிரி அருகே உள்ள தானம்பட்டி கிராமத்தில் மாபெரும் எருது விழா கிராம மக்கள்சார்பில் நடைபெற்றது.

இதில் கிருஷ்ணகிரி திருப்பத்தூர் வேலூர் வாணியம்பாடி ஆம்பூர் ஆந்திர மாநில குப்பம் பலமனேரி உள்ளிட்ட இடங்களில் இருந்து 300 க்கும் மேற்பட்ட எருதுகள் பங்கேற்றது.

இதில் 120 மீட்டர் தூரத்திற்கு தடுத்து மரத்திலான அரண்கள் அமைக்கப்பட்டு அதன் நடுவே வாடி வாசலில் இருந்து ஒவ்வொரு எருதுகளாக விடப்பட்டது. குறைந்த நொடியில் அது வேகமாக சென்று இலக்கை எட்டும் எருதுகளின் உரிமையாளர்களுக்கு முதல் பரிசாக ரூ. 1 லட்சமும், இரண்டாம் பரிசாக ரூ.80 ஆயிரமும், மூன்றாம் பரிசாக ரூ.60 ஆயிரம் என 105 பரிசுகள் தானப்பட்டி கிராம மக்கள் சார்பாக வழங்கப்பட்டது. மேலும் இந்த விழாவில் வாடி வாசலில் இருந்து சீறிப்பாய்ந்து ஓடிய எருதுகளை தட்டி உற்சாகப்படுத்தினார்கள்

இந்த விழாவை காண பல்வேறு பகுதிகளில் இருந்து ஏராளமானவர்கள் கண்டு களித்தனர். ,

இந்த விழாவிற்கான ஏற்பாடுகளை தானம்பட்டி கிராம மக்கள் சிறப்பாக செய்து இந்தனர்.

# மண்டைக்காடு பகவதி அம்மன் கோவில் திருவிழா பாதுகாப்பு பணி; காவலர்களை பாராட்டிய எஸ்பி



நாகர்கோவில், மார்.12

கன்னியாகுமரி மாவட்டம் மண்டைக்காடு பகவதி அம்மன் திருவிழாவானது 01.03.2026 ம் கொடியேறி நடைபெற்று வந்தது. மேலும் பாதுகாப்பு பணிக்காக மாவட்ட காவல்துறை சார்பாக சிசிடிவி கண்காணிப்பு, கண்காணிப்பு கோபுரங்கள், மே ஐ ஹெல்ப் யு, மூன்றடுக்கு கடற்கரைபாதுகாப்பு, முதலுதவி ஏற்பாடுகள், பக்தர்களுக்கு வழிகாட்ட பேனர்கள் அமைப்பு, பாதுகாப்பு எண்கள், பீப்பாயில் வைக்கப்பட்ட கடல்நீர், தற்காலிக பேருந்து நிறுத்தம் செய்யும் இடங்கள், பார்க்கிங் வசதிகள், காவல் கட்டுப்பாட்டு அறை உள்ளிட்ட பல்வேறு சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டது.

இந்நிலையில் மண்டைக்காடு திருவிழாகூட்ட நெரிசலில் காணாமல் போன குழந்தை மற்றும் பொதுமக்கள் தவறவிட்ட செல்போன்கள், மணிபர்ஸ் ஆகியவற்றை போலீசார் மீட்டு உரியவர்களிடம் ஒப்படைத்தார்கள். மேலும் பக்தர்கள் எந்த இடையூறு இன்றி தரிசனம் செய்யும் வகையில் போக்குவரத்து வசதிகள் மற்றும் பார்க்கிங் வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருந்தது. சிறப்பாக செயல்பட்டு பொதுமக்களில் பாதுகாப்பை உறுதி செய்த காவல் அதிகாரிகள் மற்றும் போலீசாரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பாராட்டினார்.

# ஏழைகளுக்கு நோன்பு பரிசு: துணை மேயர் தொடங்கி வைத்தார்

நாகர்கோவில்
மார்ச் 12



கன் னி ய ா கு ம ரி மாவட்ட முஸ்லிம் ஜமாஅத் கூட்டமைப்பு சார்பில் புனித ரமளானை முன்னிட்டு ஏழை மக்களுக்கு நோன்பு கிட் வழங்கும் நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது.

நாகர்கோவில்தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு மாவட்ட தலைவர் மீரான் மைதீன் தலைமை தாங்கினார். தமிழ்நாடு முஸ்லிம் ஜமாஅத் கூட்டமைப்பு தலைவர் ஹிமாம் பாதுஷா முன்னிலை வகித்தார்.

இந்நிகழ்ச்சியில் நாகர்கோவில் மாநகராட்சி துணை மேயர் மேரி பிரின்ஸி லதா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு நோன்பு கிட் வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்தார். அதனை தொடர்ந்து ஒருங்கிணைப்பாளர் ஷேக் முகமது நோன்பு கிட் வழங்கினார்.

இதில் மாவட்டச் செயலாளர் செய்னுல் ஆப்தீன், அக்பர் ஆசிரியர், பொருளாளர் ஹுமாயூன் கபீர், சிறுபான்மையினர் கூட்டமைப்பு துணை தலைவர் ஸ்டுவர்ட், சம்சுதீன், ஹாஜி முகமது இக்பால் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இறுதியாக பொதுச்செயலாளர்முஜிபு ரஹ்மான் நன்றி தெரிவித்தார்.

# தனியார் பள்ளி உரிமையாளரிடம் நிலம் வாங்கி தருவதாக ரூ 10.5 கோடி மோசடி: நாகர்கோவிலில் தந்தை, மகன் மீது வழக்கு

பஞ்சாப் மாநிலத்தை சேர்ந்தவர் சார்லஸ் ஜெபக்குமார் (50). இவர் மோகா நகரில் சேக்ரட் ஹார்ட் இன்டர்நேஷனல் பள்ளி நடத்தி வருகிறார். தமிழ்நாடு உட்பட இந்தியாவின் பல நகரங்களில் இந்த பள்ளி இயங்கி வருகிறது. குமரி மாவட்டத்தில் ஏற்கனவே மார்த்தாண்டத்தில் இந்த இன்டர்நேஷனல் பள்ளி இருக்கிறது. மேலும் பல நகரங்களில் இந்த பள்ளி தொடங்குவதற்கான நடவடிக்கைகளை சார்லஸ் ஜெபக்குமார் மேற்கொண்டு வந்தார். இதற்காக நில தேர்வு செய்யும் பணியில் ஈடுபட்டு வந்தார்.

அப்போது அவரது குடும்ப நண்பர் டாக்டர் சதீஷ் என்பவர் மூலம் நாகர்கோவில் பகுதியை சேர்ந்த ஜோசப் மரிய செபாஸ்டின் என்பவரின் அறிமுகம் கிடைத்தது அவர் அவரது மகன் பிரகாஷ் ஆகியோரின் சேர்ந்து செங்கல்பட்டு மாவட்டத்தில் நிலம் வாங்கி தருவதாக கூறியுள்ளனர். இதையடுத்து சார்லஸ் நிலத்தை வாங்குவதற்காக பல்வேறு தவணைகளாக ரூ 10.5 கோடி கொடுத்ததா கூறப்படுகிறது.

நிலத்தை சார்லஸ் ஜெபகுமார் பெயரில் பதிவு செய்யாமல் ஜோசப் மரிய செபாஸ்டின் பெயரில் கிரய ஒப்பந்தம் செய்ததாக கூறப்படுகிறது.

இது பற்றி அறிந்ததும் சார்லஸ் ஜெபக்குமார் தனது பணத்தை பயன்படுத்தி மோசடி செய்து ஏமாற்றியதாக ஜோசப் மரிய செபஸ்டின், மகன் பிரகாஷ் மீது மோகா காவல் நிலையத்தில் புகார் அளித்தார்.

இந்த புகாரின் பேரில் அங்குள்ள போலீசார் தந்தை மகன் மீது மோசடி உள்ளிட்ட பிரிவு வழக்கு பதிவு செய்தனர். பின்னர் பணம் கைமாறிய இடம் நாகர்கோவில் நேசமணி நகர் காவல் நிலைய பகுதி என்பதால் அந்த எப்ஐ ஆர் குமரி மாவட்ட எஸ்பி அலுவலகத்திற்கு அனுப்பி வைத்தனர். பஞ்சாப் மொழியிலிருந்த அந்த எப் ஐ ஆர் சென்னையில் மொழிமாற்றம் செய்யப்பட்டு தற்போது நாகர்கோவில் நேசமணி நகர் காவல் நிலையத்தில் ஜோசப் மரிய செபாஸ்டின் அவரது மகன் பிரகாஷ் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

# அதியமான்கோட்டை காள பைரவர் கோவிலில் தேய்பிறை அஸ்டமியையொட்டி பக்தர்கள் சுவாமி தரிசனம்



தருமபுரி மார்ச் 12

தருமபுரி மாவட்டம் அதியமான் கோட்டையில் உள்ள காலபைரவர் இக்கோவிலில் மாதம்தோறும் தேய்பிறை அஷ்டமி நாழில் தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும், அண்டை மாநிலமான கேரளா,கர்நாடகாவில் இருந்தும் ஏராளமான பக்தர்கள் இக்கோவிலிக்கு வந்து தங்களது வேண்டுதலை நிறைவேற்றும் வகையில் பூசணி மற்றும் தேங்காய் தீபமேற்றி வழிபாடு செய்கின்றனர். தேய்பிறை அஸ்டமியை ஒட்டி கால பைரவருக்குசிறப்புஅபிஷேகம் , ஆராதனைகள்நடைபெற்று. இதை தொடர்ந்து சுவாமி ராஜ அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பளித்தனர்.

# விளாத்திகுளம் அருகே ஊசிமேசியாபுரத்தில் சமுதாய நலக்கூடம் அடிக்கல் நாட்டு விழா

விளாத்திகுளம் மார்ச் 12

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றியம், தத்தனேரி ஊராட்சி ஊசிமேசியாபுரம் கிராமத்தில் ரூ25 லட்சம் மதிப்பீட்டில் சமூக நலக்கூடம் கட்டுவதற்கான பணியினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் மார்கண்டேயன் அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் விளாத்திகுளம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் முத்துக்குமார்,தினகரன், விளாத்திகுளம் தெற்கு ஒன்றிய செயலாளர் இம்மானுவேல், விளாத்திகுளம் கிழக்கு ஒன்றிய செயலாளர் சின்னமாரிமுத்து, கோவில்பட்டி கிழக்கு ஒன்றிய செயலாளர் நவநீதகண்ணன், விளாத்திகுளம் மத்திய ஒன்றிய செயலாளர் ராமசுப்பு, விளாத்திகுளம் மேற்கு ஒன்றிய செயலாளர் அன்புராஜன், விளாத்திகுளம் பேரூராட்சி தலைவர் சூர்யா அயன்ராஜ், பொதுக்குழு உறுப்பினர் ராஜாகண்ணு, வடக்கு மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் பாண்டியராஜன், முன்னாள் மாவட்ட ஊராட்சி



குழு உறுப்பினர் நடராஜன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் உமாசங்கர் சுரேஷ்குமார், திமுக கிளைச் செயலாளர்கள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள்,ஊர் பொது மக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# அதிகாரிகளை கண்டித்து ஆர்ப்பாட்டம்




பூதப்பாண்டி மார்ச் 12

பூதப்பாண்டியிலுள்ள தோவாளை தாசில்தார் அலுவலகம் முன்பு விடுதலை சிறுத்தைகள் மற்றும் லெலினிஸ்ட் கம்யூனிஸ்ட் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது ஆர்ப்பாட்டத்தில் செண்பகராமன்புதூர் சமத்துவபுரம் அருகே அரசுக்கு சொந்தமான இடத்தில் ஐந்து வருடங்களுக்கு மேலாக குடியிருந்து வரும் ஏழை மக்களுக்கு பட்டா வழங்காமல் புதிய நபர்களுக்கு அந்த இடத்தில் பட்டா வழங்கியதாகவும் அதை கேட்ட அந்த குடியிருப்பு வாசிகளை அதிகாரிகள் கொச்சைபடுத்தி பேசியதாகவும் தாலுகாவின் பல இடங்களில் விவசாய நிலங்கள் அதிகாரிகளின் துணையோடு விளைநிலங்களாக மாறியது உள்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது

இதில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாநில செயலாளர் அல் காலத், சி.பி.ஐ.எம்.எல் மணவை கண்ணன், பொருளாளர் தினேஷ், அழகு தர்ம கண் உள்பட பலர் பேசினார்கள்

# குமரி மாவட்ட வாக்குச்சாவடிகளில் பாதுகாப்புப் பணி: கன்னியாகுமரி மாவட்ட காவல் துறை அறிவிப்பு

நாகர்கோவில் மார்ச் 12

2026தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள வாக்குச்சாவடிகளில் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ள முன்னாள் ராணுவ வீரரர்கள், ஒய்வு பெற்ற மத்திய ஆயுதப்படை வீரர்கள், ஓய்வு பெற்ற காவல் துறை ஆளிநர்கள் மற்றும் ஒய்வு பெற்ற தீயணைப்பு துறை வீரர்கள் ஆகியோர் தற்காலிக பணிக்கு அழைக்கப்படுகிறார்கள்.

விண்ணப்பிக்கும் முறை:

விருப்பமுள்ள முன்னாள் ராணுவ வீரர்கள், துணை இராணுவ வீரரர்கள், ஒய்வு பெற்ற காவல் ஆளிநர்கள், ஒய்வு பெற்ற தீயணைப்பு துறை வீரர்கள் கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் உள்ள தேர்தல் பிரிவு அல்லது முன்னாள் படை வீரர்கள் நல துணை இயக்குனர் அலுவலகம், நாகர்கோவில் அல்லது உங்கள் பகுதிக்குட்பட்ட அருகிலுள்ள காவல் நிலையத்தை அணுகி விருப்ப மனுக்களை சமர்ப்பிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

# கிருஷ்ணகிரியை அடுத்த தானம்பட்டி கிராமத்தில் 5ம் ஆண்டு எருது விடும் திருவிழா 300க்கும் மேற்பட்ட எருதுகள் பங்கேற்பு



கிருஷ்ணகிரி மார்ச் 12:

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தைத்திருநாள் பொங்கல் பண்டிகை முன்னிட்டு பல்வேறு கிராமங்களில் தமிழர்களின் வீர விளையாட்டான எருது விடும் விழா நடத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் கிருஷ்ணகிரி அருகே உள்ள தானம்பட்டி கிராமத்தில் ஐந்தாவது ஆண்டாக மாபெரும் எருது விடும் விழா நடைபெற்றது. இதில் கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், வேலூர், வாணியம்பாடி, ஆம்பூர், ஆந்திர மாநிலமான குப்பம், பலமனேரி, உள்ளிட்ட இடங்களில் இருந்து 300 க்கும் மேற்பட்ட எருதுகள் பங்கேற்றது.

இதில் 120 மீட்டர் தூரத்திற்கு மரத்திலான அரண்கள் அமைக்கப்பட்டு அதன் நடுவே வாடி வாசலில் இருந்து ஒவ்வொரு எருதுகளாக விடப்பட்டது. குறைந்த நொடியில் வேகமாக சென்று இலக்கை எட்டும் எருதுகளின் உரிமையாளர்களுக்கு முதல் பரிசாக ரூ. 1 லட்சமும், இரண்டாம் பரிசாக ரூ.80 ஆயிரமும், மூன்றாம் பரிசாக ரூ.60 ஆயிரம் என 105 பரிசுகள் தானப்பட்டி கிராம மக்கள் மற்றும் விழா குழு சார்பாக வழங்கப்பட்டது. மேலும் இந்த விழாவில் வாடி வாசலில் இருந்து சீறிப்பாய்ந்து ஓடிய எருதுகளை இளைஞர்கள் மற்றும் வீரர்கள் தட்டி உற்சாகப்படுத்தினார்கள். இந்த விழாவை காண பல்வேறு பகுதிகளில் இருந்து ஏராளமானவர்கள் கண்டு களித்தனர். ,

இந்த விழாவிற்கான ஏற்பாடுகளை தானம்பட்டி கிராம மக்கள் சிறப்பாக செய்து இந்தனர். அசம்பாவிதங்களை தடுக்க ஏராளமான போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர். மேலும் அவசர மருத்துவ உதவிக்கு ஆம்புலன்ஸ் வசதியும் செய்யப்பட்டு இருந்தது.

# குடிநீர் கேட்டு 2ம் மண்டல அலுவலகத்தை பொதுமக்கள் முற்றுகையிட்டனர்



திருப்பூர்மார்ச்: 12

போயம் பாளையம். மாநகராட்சி இரண்டாவது மண்டலத்துக்குட்பட்ட நெருப்பெரிச்சல் பகுதியில் குடிநீர் கேட்டு பொதுமக்கள் மாநகராட்சி மண்டல அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

திருப்பூர் மாநகராட்சிக்கு இரண்டாவது மண்டலத்திற்கு உட்பட்ட நெருப்பெரிச்சல் பகுதியில் உள்ள ஜி.எம். பாலன் நகர் 2வது விரிவு பகுதியில் 200க்கும் மேற்பட்ட குடும்பங்கள் 10 வருடங்கள் மேல் வசித்து வருகின்றனர். இந்த நிலையில் அப்பகுதியில் வீட்டு மனைகள் அங்கீகரிக்கப்படாததால் மாநகராட்சி சார்பில் அடிப்படை வசதிகள் செய்து தரவில்லை என கூறப்படுகிறது.

ஆனால் மாநகராட்சி சார்பில் வீட்டு வரி, பாதாள சாக்கடை வரி, உள்ளிட்ட அனைத்து வரிகளும் அப்பகுதி மக்கள் மாநகராட்சியில் கட்டணமாக கட்டி வருகின்றனர். இந்த நிலையில் கோடை காலம் என்பதால் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. தங்கள் பகுதிக்கு பொது குடிநீர் குழாய், மற்றும் வீடுகளுக்கு புதிய குடிநீர் குழாய் இணைப்பு வழங்க கோரி பலமுறை மனு அளித்தும் இதுவரை எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்காததால் பொதுமக்கள் ஒன்று திரண்டு மாநகராட்சி மண்டல அலுவலகத்தை முற்றுகையிட்டு வரி கட்டின ரசீதை வைத்து அதிகாரிகளுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். மேலும் ஒரு வாரத்திற்குள் குடிநீருக்கான நடவடிக்கை எடுக்கவில்லை எனில் பொதுமக்கள் ஒன்று திரண்டு சாலையில் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபடுவதாக தெரிவித்தனர். இதனால் சிறிது நேரம் பரபரப்பாக காணப்பட்டது.

# தஞ்சையில் அதிமுக மகளிர் அணி சார்பில் உலக மகளிர் தின விழா



தஞ்சாவூர், மார்ச்,12

தஞ்சை கீழவாசல் ஸ்ரி சுந்தர் மஹால் திருமண மண்டபத்தில் தஞ்சை மத்திய மாவட்ட அதிமுக மகளிர் அணி சார்பில் உலக மகளிர் தின விழா நடந்தது.

மாவட்ட மகளிர் அணி செயலாளரும், தலைமை செயற்குழு உறுப்பினருமான சித்ரா அங்கப்பன் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த விழாவிற்கு மாநகர மாவட்ட செயலாளரும் மாநில கொள்கை பரப்பு துணைச் செயலாளருமான வழக்கறிஞர் சரவணன் தலைமை தாங்கினார். கரந்தை பகுதி செயலாளர் பஞ்சாபிகேசன் வரவேற்றார். விழாவில் அதிமுக அமைப்புச் செயலாளர் காந்தி, கொள்கை பரப்பு துணைச்செயலாளர் துரை. திருஞானம், விவசாய பிரிவு இணைச்செயலாளர் சிங். ஜெகதீசன், மாநில மருத்துவர் அணி செயலாளர் டாக்டர் துரை. கோ. கருணாநிதி, தலைமை செயற்குழு உறுப்பினரும், முன்னாள் மேயருமான சாவித்திரி கோபால், பகுதி செயலாளர்கள் புண்ணியமூர்த்தி, சதீஷ்குமார், மனோகர், மாநகராட்சி உறுப்பினர் வழக்கறிஞர் தேவிகண்ணுக்கினியாள், மாவட்ட பொருளாளர் அன்புச்செல்வன், மாவட்ட அம்மா பேரவை செயலாளர் முத்துமாறன், மாணவர் அணி இணை செயலாளர் சிங். ஜெ.முருகானந்தம், மாவட்ட மாணவரணி செயலாளர் விவேக், வர்த்தக அணி செயலாளர் வி.வி.எஸ்.ராஜேஷ், மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ், அமைப்புசாரா தொழிலாளர் அணி மாவட்ட செயலாளர் சம்பத், மற்றும் பலர் கலந்து கொண்டனர். விழாவில் அதிமுக மகளிர் அணியினர் ஒரே மாதிரியான சேலை உடுத்தி பாடல் பாடி கேக் வெட்டி மகளிர் தின விழாவை உற்சாகமாக கொண்டாடினர்.

# தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மூளை சாவு அடைந்த முதியவரின் உடல் உறுப்புகள் தானம் 3 பேர் பயன்பட்டனர்




தஞ்சாவூர் மார்ச் 12

தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மூளை சாவு அடைந்த முதியவரின் உடல் உறுப்புகள் தானமாக பெறப்பட்டது . 3 பேர் பயன் அடைந்தனர் கடலூர் மாவட்டம் சிதம்பரம் தாலுக்கா விளங்கி அம்மன் கோயில் தெருவை சேர்ந்தவர் கோபால் (வயது 80)இவர் கடந்த மார்ச் 20 ஆம் தேதி ரோட்டில் நடந்து சென்ற போது நான்கு சக்கர வாகனம் மோதியது. இதில் அவருக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. உடனே அவரை அக்கம் பக்கத்தினர் மீட்டு சிதம்பரம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப் பட்டது. பின்னர் மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு கோபாலுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. ஆனாலும் சிகிச்சை பலனின்றி கோபால் மூளை சாவு அடைந்தார் இதையடுத்து அவரது உடல் உறுப்புகள் தானமாக பெறுவது தொடர்பாக உறவினர்களிடம் டாக்டர்கள் எடுத்துரைத்தனர். இதனால் கோபால் உடல் உறுப்புகளை தானம் அளிக்க அவரது குடும்பத்தினர் ஒப்புதல் அளித்தனர். அதன்படி கோபால் உடலில் இருந்து 2 சிறுநீரகங்கள், தோல் ஆகியவை அறுவை சிகிச்சை மூலம் அகற்றப்பட்டன. 2 சிறுநீரகங்கள் திருச்சியில் உள்ள தனியார் மருத்துவமனைக்கும், தோல் தனியார் மருத்துவமனைக்கும் தானமாக வழங்கப்பட்டன. உடல் உறுப்பு தானமாக பெறப்பட்ட கோபால் உடலுக்கு தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி முதல்வர் பூவதி தலைமையில் அரசு இறுதி மரியாதை செலுத்தப்பட்டது. பின்னர் கோபால் உடல் தஞ்சாவூர் மருத்துவ ஆம்புலன்ஸ் மூலம் போலீஸ் உதவியுடன் சொந்த ஊருக்கு அனுப்பி வைக்கப்பட்டு இறுதி சடங்கு நடந்தது. இந்த தானத்தின் மூலம் 3 பேர் பயன் பெற்றனர்.

# தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகத்தில் நூல் வெளியீட்டு விழா



தஞ்சாவூர் மார்ச் 12. தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழக மொழிபெயர்ப்பு துறையின் இணைபேராசிரியரும் துறை தலைவருமான ரா.சு.முருகன் தமிழ் ஆங்கில இலக்கண மொழிபெயர்ப்பு என்னும் நூலை எழுதியுள்ளார். இந்த நூல் தமிழில் வினைச்சொற்கள், பயனிலைகள் மொழிபெயர்த்தல், செயல்பாட்டு வினைகளை மொழிபெயர்த்தல், வருணனை வாக்கியங்களில் மொழிபெயர்ப்பு, நீண்ட தொடர்களை மொழிபெயர்ப்பதில் சிக்கல்கள், தொடர்களை மொழிபெயர்த்தல், எடுத்துக்காட்டான மொழிபெயர்ப்புக்கள் சில மற்றும் மொழிபெயர்ப்பாளர் அடையும் சிக்கல்கள் ஆகிய பொருளடக்கங்களைகொண்டுள்ளது. இந்த நூல் வெளியீட்டு விழா தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகத்தில் நடந்தது. இந்த நூலை துணை வேந்தர் குழு உறுப்பினர் பாரத ஜோதி தலைமை தாங்கி, வெளியிட பதிவாளர் (பொறுப்பு) பன்னீர்செல்வம் முன்னிலை வகித்து, முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டார் இந்நூல் தமிழ்ப் பல்கலைக்கழக அனைத்து மாணவர்களும் பயன்பெறும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

# திம்மாபுரம் ஊராட்சியில் குடிநீர் தொட்டி திறப்பு




செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் அடுத்த அச்சிறுப்பாக்கம் அருகே உள்ள திம்மாபுரம் ஏரிக்கரை தெருவில்15ம் நிதிக்குழு மானியம் திட்டத்தின் கீழ் சுமார்121.755மதிப்பீட்டில் ஊராட்சி மன்றதலைவர் கெங்காதுரை அவர்களின் தலைமையில் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்

# இலஞ்சியில் உள்ள டிடிடிஏ டிஎஸ் டேனியல் ராஜம்மாள் கல்வியியல் கல்லூரியில் பல் மருத்துவ முகாம்



தென்காசி மாவட்டம் இலஞ்சியில் உள்ள டிடிடிஏ டிஎஸ் டேனியல் ராஜம்மாள் கல்வியியல் கல்லூரியில் மகளிர் தின விழாவை முன்னிட்டு, பரிசளிப்பு விழா, இந்திய பல் மருத்துவ சங்கம் தென்காசி கிளை சார்பில் பல் மருத்துவ முகாம் ஆகியவை நடைபெற்றன.

நிகழ்ச்சிக்கு கல்லூரி தாளாளர் ராஜ குமார் தலைமை வகித்தார் முதல்வர் (பொ) ஷீலா நவரோஸ் முன்னிலை வகித்தார் உடற்கல்வி பேராசிரியர் ஐசக் ஜான்சன் வரவேற்றார் மாணவ ஆசிரியர்கள் கலை நிகழ்ச்சிகள் நடந்தன. பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன

தொடர்ந்து இந்திய பல் மருத்துவர் சங்கம் சார்பில் இலவச பல் சிகிச்சை முகாம் மற்றும் விழிப்புணர்வு கருத்தரங்கம் நடந்தது இதில் பல் மருத்துவ சங்கம் தலைவர் கலந்தர் மஸ்தான், செயலாளர் செய்யது முகமது தமீம், பல் ஆரோக்கியத்திற்கான குழு அமைப்பாளர் ஷிஃப்னாஷ் ரஃப்னா, பொருளாளர் நசிருதீன், சுரேஷ், லதா, ரதியா, வீனாராம் பட்டேல், மகாலட்சுமி, வசந்த், ஸ்டான்லி புஷ்பராஜ். ஆகியோர் கொண்ட குழுவினர் சிகிச்சை அளித்தனர்

உதவி பேராசிரியர் ஜீன் தொகுத்து வழங்கினார் உதவி பேராசிரியர் ஜெனிபர், ஜெபா எபனேசர், நூலகர் ஏஞ்சலின், அலுவலக பணியாளர்கள் பிரெட்ரிக், ஷேரோன், பேதுரு, லட்சுமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் முடிவில் உதவி பேராசிரியர் லீதியாள் சொர்ண ஜெயா நன்றி கூறினார்



மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கேஆர். பெரியகருப்பன் அவர்கள், சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் பேரூராட்சிக்குட்பட்ட புதுப்பட்டி பகுதியில் கூட்டுறவுத்துறையின் சார்பில், கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியின் கீழ் கட்டப்படவுள்ள நியாய விலைக்கடைகட்டடத்திற்குஇன்றையதினம்(11.3.2026) அடிக்கல் நாட்டி, பணியினை தொடங்கி வைத்தார்.உடன் கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் திரு. இராஜேந்திர பிரசாத், திருப்பத்தூர் பேரூராட்சி தலைவர் திருமதி கோகிலாராணி, சரக துணை பதிவாளர்கள் திரு. பாபு (திருப்பத்தூர்), திரு.செந்தில்குமார் (காரைக்குடி), திருப்பத்தூர் வட்டாட்சியர் திரு.மாணிக்கவாசகம் உட்பட பலர் உள்ளனர்.




தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் (11.03.2026), தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 நடைபெறவுள்ளதை முன்னிட்டு தேர்தல் அறிவிக்கப்பட்ட முதல் 72 மணி நேரத்திற்குள் அமுல்படுத்த வேண்டிய தேர்தல் நன்னடத்தை விதிகள் குறித்து தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் திரு.க.இளம்பகவத், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.



மரியாதைக்குரிய கரூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.V செந்தில்பாலாஜி அவர்கள், (11.03.2026) கரூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் புதிய வளர்ச்சித் திட்டப் பணிகளை தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.கு.விமல்ராஜ் மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மரு.வீ.ரெ.வீரபத்திரன் ஆகியோர் உள்ளனர்.




தென்காசி மாவட்டம் கடையநல்லூர் மகளிர் திட்ட அலுவலகத்தில் (11.03.2026) வருகின்றதமிழ்நாடுசட்டமன்றப்பொதுத்தேர்தல்2026ஐமுன்னிட்டு100%வாக்குப்பதிவு விழிப்புணர்வு பேரணி மற்றும் மனித சங்கிலி மகளிர் திட்ட இயக்குநர் திருமதி.எஸ். அபிதா ஹனீப் அவர்கள் தலைமையில் நடைபெற்றது



திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் அடிவாரத்தில் (11.03.2026) மாவட்ட நிர்வாகம் மற்றும் தமிழ்நாடு மாசு கட்டுபாட்டு வாரியம் சார்பில் "நெகிழி இல்லா திருவள்ளூர் மாவட்டம்" (ம) "மீண்டும் மஞ்சப்பை" திட்டத்தில் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் வளாகத்தை நெகிழி இல்லா வளாகமாக மாற்றும் நோக்கில் அமைக்கப்பட்டுள்ள நெகிழி பொருட்கள் சோதனைச்சாவடியை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.மு.பிரதாப்,இ.ஆ.ப., அவர்கள் திறந்து வைத்தார். உடன் திருவள்ளூர் மாவட்ட வன அலுவலர் திரு.சுப்பையா இ.வ.ப., திருவள்ளூர் மாசு கட்டுபாட்டு வாரிய சுற்றுச்சூழல் பொறியாளர் முனைவர். செல்வஇளவரசி, திருத்தணி நகராட்சி ஆணையர் திரு.கன்னியப்பன் மற்றும் பல்துறை சார்ந்த அரசு அலுவலர்கள் உள்ளனர்.

# சேலம் 7 அரசு கலைக் கல்லூரியில் பன்னாட்டுக் கருத்தரங்கம்



சேலம், மார்ச்,12

சேலம் 7 அரசு கலைக் கல்லூரியின் திருவள்ளுவர் அரங்கில் கருத்தரங்கம் நடைபெற்றது. இக்கருத்தரங்க நிகழ்விற்கு தமிழ்த் துறைத் தலைவர் ஐ.பிரேமலதா ஒருங்கிணைத்தார். முதல் அமர்விற்கு தேசிய சமூக இலக்கியப் பேரவையின் மாநிலத் தலைவரும் கல்லூரியின் தமிழ் முதுகலைப் பாடத் திட்டக்குழு உறுப்பினருமானதாரை.அ.குமரவேலு தலைமை தாங்கினார். நாட்டுப்புறக் கலைகளில்வெளிப்படும்மானிடவியல்என்றதலைப்பில் முனைவர். இராமச்சந்திரன்தமிழ் இலக்கியங்களில் படைப்பாற்றலும் சமாளிப்புத் திறனும்என்ற தலைப்பில் பேராசிரியர் போகேஸ்வரனும் உரையாற்றினார்கள். தாரை.அ.குமரவேலு தன் தலைமை உரையில் "வள்ளுவர் காட்டிய வாழ்வியல் திறன்கள்" என்ற தலைப்பில் உரையாற்றினார் அப்போது அவர் பேசியதாவது,இலக்கியம் படைப்பது மனிதவாழ்விற்கானநோக்கங்களையும் வாழ்வில் ஏற்படும் இன்ப துன்பங்களில் எப்படி மன உறுதியுடன் நின்று வாழ வேண்டும் என்பதற்கான ஊக்கமும் தன்னம்பிக்கையும், வழிகாட்டுதலையும் தருவதே இலக்கியமாகும்.வைக்கபபடும் என முடியும் குறட்பாக்கள் நான்காகும் அதில் உலகத்தார் உண்டு இருக்கிறது என நம்பும் ஒன்றை இல்லையென்று வாதிடுபவனை பேயாக அவனைக் குறிக்கிறார்.

அதைப்போல தன்னைப்போலவே பிறரை எண்ணுகின்ற சமுதாய நலம் சார்ந்த இரக்கமுள்ள அன்புகாட்டும் மனிதனாக நாம் ஒவ்வொரும் வாழ வேண்டும் அன்பின் வழியாகத்தான் உயிர்களின் தன்மையை நாம் உணர முடியும் அவ்வாறு உணராத மனிதனை உயிரற்ற உடலாக இழிவு படுத்திப் பேசுகிறார் வள்ளுவர்

இந்த உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே என்பது தழிழர் வாழ்க்கையின் உயர்ந்த நிலை அவ்வாறு வாழ்கின்ற வாழ்வில் அன்பு,அறிவு,பண்புடன் கூடிய நிறைவாழ்வு வாழ்பனை வானளவுஉயர்ந்தபுகழுக்குரியவனைப்பாராட்டுகிறார்வள்ளுவர்அவ்வாறான உயர்ந்த பண்பு நெறிகளோடு ஆட்சி செய்யும் அரசாள்பவர்களை மக்கள் இறைவனாக என மகிழ்ச்சியோடு வாழ்ந்து அவனைப் பாராட்டி இறைவனாக எண்ணி மக்கள் வழிபடுவார்கள் என்று வள்ளுவர் கூறுகிறார். இத்தகைய பண்புள்ள மனிதர்களால் தான் இந்த உலகம் செழிப்பாக சிறப்பாக உயர்வாக இன்றும் வளர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கிறது என உலகம் நிலைபெற்று வாழ்வதற்கான அடிப்படை பண்பைப் பாராட்டி நமக்கு உணர்த்துகிறார் வள்ளுவர். முதலில் கண்ணுக்குத் தெரியாதப் பேயாக, பின் கண்ணுக்குத் தெரியும் உயிரற்ற உடலாக, பின் வான் உலகத்தும் வாழும் தெய்வமாக, முடிவாக பண்புடன் வாழும் மனிதர்களை இறைவனாகவே வணங்கப்படுவார் வாழ்க்கையின் படிநிலைகளை உயர்த்திக் காட்டுகிறார்இந்நிகழ்வில், தமிழ்ச்செம்மல் மோகன்குமார், முனைவர். திருப்பதி, முனைவர். கௌரி, முனைவர் முத்து நகை மற்றும் 20 க்கும் மேற்பட்ட பேராசிரியர்கள் கருத்துரையாற்றினார்கள். சி.சு.கந்தசாமி நிகழ்வினைத் தொகுத்து வழங்கினார்.

முந்நூறுக்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர். முதல் அமர்வுக்குத் தலைமை ஏற்ற தாரை.அ.குமரவேலு கருத்துரை வழங்கிய முத்துநகைக்கு பாராட்டுச் சான்றிதழ் வழங்குகிறார் அருகில் துறைத்தலைவர் ஐ.பிரேமலதா, டாக்டர்.கே. அர்த்தனாரி ஆகியோர். உள்ளனர்

# உலக குளுக்கோமா வாரத்தை முன்னிட்டு தி ஐ பவுண்டேசன் கண் மருத்துவமனை சார்பில் விழிப்புணர்வு மனித சங்கிலி



ஈரோடு தி ஐ பவுண்டேசன் கண் மருத்துவமனை மற்றும் கொங்கு கலை அறிவியல் கல்லூரி மற்றும் ஸ்ரீ வெங்கடேஸ்வரா காலேஜ் ஆப் பாராமெடிக்கல் அண்ட் அலைடு ஹெல்த் சயின்ஸ் மாணவ, மாணவியர்கள் இணைந்து உலக குளுக்கோமா வாரத்தை முன்னிட்டு விழிப்புணர்வு மனித சங்கிலி தி ஐ பவுண்டேசன் கண் மருத்துவமனையில் நடைபெற்றது.

இதனை, அறம் தொண்டு அறக்கட்டளை மற்றும் தி இந்தியன் பப்ளிக் பள்ளியின் நிர்வாக இயக்குனர் கீர்த்திகா சிவகுமார் தொடங்கி வைத்தார். இது குறித்து தி ஐ பவுண்டேசன் கண் மருத்துவமனை தலைமை மருத்துவர்கள் அபிராமி, சக்தி ராஜேஸ்வரி கூறியதாவது. "2020ம் ஆண்டில், உலகளவில் குளுக்கோமா நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 76 மில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளது. நம் நாட்டில் குளுக்கோமா (கண் அழுத்த நோய்) கண்டறிய நடத்திய சோதனைகள் 3% முதல் 5% இந்தியர்கள் இந்நோயினால் தாக்கப்படும் அபாயத்தில் உள்ளார்கள் என்பதை வெளிப்படுத்துகிறது. இந்த ஆபத்தான எண்ணிக்கையில் 90% பேர் குளுக்கோமா நோயின் பாதிப்பை கண்டறியாமல் இருக்கிறார்கள். உலகளவில் 76 மில்லியன் மக்கள்

இந்த நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர், மேலும் 2.1 மில்லியன் பேர் இந்த நோயால் பார்வை இழந்துள்ளனர், மேலும் 4.2 மில்லியன் பேர் பார்வைக் குறைபாடு உள்ளவர்களாக நம்பப்படுகிறது. தோராயமாக, 40 வயதுக்கு மேற்பட்ட 12 மில்லியன் இந்தியர்கள் இந்த நோயால் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது, இது நம் நாட்டில் பார்வையற்றோரில் 12.8% ஆகும். இந்த நோயின் பரவல் சுமார் 2 முதல் 13% வரை (சராசரியாக 3.23%) உள்ளது.. கண்பார்வை இழப்பை தடுக்கக்கூடிய பல காரணங்களில் குளுக்கோமா மூன்றாவது இடத்தில் இருப்பதால், இதனை ஆரம்ப நிலையிலேயே கண்டறிவது, அவசியமாயிருக்கிறது 40 வயதுக்கு மேல் சர்க்கரை நோய், உயர் கிட்டப்பார்வை, காயம், வீக்கம், ஸ்டீராய்டு உபயோகித்தல் மற்றும் பிறவி கண் கோளாறுகள் உள்ளவர்களுக்கு குளுக்கோமா வர அதிக வாய்ப்புள்ளதுஇதனால் 40 வயதிற்கு மேற்பட்டோர் வருடம் ஒருமுறை கண் பரிசோதனை செய்வது அவசியம். ஈரோடு தி ஐ பவுண்டேஷன் கண் மருத்துவமனையில் பொதுமக்களின் கண் நலனுக்காக மார்ச் மாதம் முழுவதும் இலவச கண் பரிசோதனை மற்றும் ஆலோசனை வழங்கப்படுகிறது. இந்த விழிப்புணர்வு மனித சங்கிலியில் தி ஐ பவுண்டேசன் கண் மருத்துவமனை மருத்துவர்கள் அபிராமி, சக்தி ராஜேஸ்வரி, மேஹா, மகேஸ்வரன், சுதன் மற்றும் மேனேஜர் கிஷோர் மார்க்கெட்டிங் மேனேஜர் கோவிந்த், பாபு மற்றும் ரமேஷ், மாரியப்பன் மற்றும் தி ஐ பவுண்டேசன் கண் மருத்துவமனை ஊழியர்கள் மற்றும் கல்லூரி மாணவ மாணவியர்கள் பேராசிரியர்கள் 250க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்

# தளி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு பாஜக சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்




ஒசூர், மார்ச்,12

பாரதிய ஜனதா கட்சி சார்பில் தளி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு தமிழக அரசை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது ,பாஜக கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட தலைவர் நாராயணன் ஜி அவர்கள் தலைமையில், தளி மத்திய மண்டல் தலைவர் மார்க்கண்டேஸ்வர ராவ் முன்னிலையில் நமது பாரத பிரதமர் நரேந்திர மோடி அறிவித்த 125 நாள் வேலை திட்டத்தை முறையாக செயல் படுத்தாத திமுக அரசை கண்டித்து கூட்டணி சார்பாக தளி அலுவலகத்தின் எதிரில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மேலும் வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்களிடம் 125 நாள் வேலை திட்டத்தை இன்னும் அமல்படுத்தாமல் இருப்பதை பற்றியும், கூடிய விரைவில் அமல் படுத்த கோரியும் பொதுமக்கள் சார்பாக தளி ஊராட்சி ஒன்றிய அலுவலக அரசு அதிகாரிக்கு பாரதிய ஜனதா கட்சி நிர்வாகிகள் மனு வழங்கினார்கள்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.